செ.வெ. எண்: 731 நாள்: 8.12.2011

**மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம், கே.கே. நகர், சென்னை–78.**
**அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் – 2011**
**மாநில விருதுகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா**

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை பின்பற்றி, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3–ஆம் நாளை **“அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினமாக”** தமிழகத்தில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு வருகிற 9.12.2011 அன்று அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் கொண்டாடப்பட உள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கென கலை மற்றும் விளையாட்டுக்களில் உள்ள திறமைகளை வெளிக்கொணரவே இவ்விழா நடத்தப்படுகிறது. இத்தினத்தில் பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்களின் கீழ், உதவி, உபகரணங்கள் மற்றும் மறுவாழ்வு உதவிகளும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்காக சேவை புரிந்த சிறந்த தொழிலதிபர்கள், சிறந்த சமூகப் பணியாளர்கள், சிறந்த ஆசிரியர்கள், சிறந்த நிறுவனம், மற்றும் மாற்றுத் திறனாளிகளில் சிறந்த பணியாளர்கள் ஆகியோருக்கு மாநில விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்விழா தொடர்பாக 9.12.2011 அன்று காலை 10.00 மணிக்கு சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள விவேகானந்தா அரங்கத்தில், மாற்றுத் திறன் படைத்த மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் கலைத் திறமைகள் வெளிக்கொணரப்படும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. இதில் அரசு மற்றும் தனியார் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறன் படைத்த 1200 குழந்தைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

9.12.2011 அன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறும் அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் தொடர்பான அரசு விழாவில் அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர்.P.மன்னர் ஜவஹர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வாங்கி முன்னிலையுரையாற்றவுள்ளார்கள். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அமைச்சர் திருமதி. எஸ்.கோகுல இந்திரா, அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி விழா சிறப்புரையாற்றவுள்ளார்கள். மாற்றுத் திறனாளிகளுக்காக சிறப்பாக சேவை புரிந்தவர்களுக்கும், சிறந்த நிறுவனங்களுக்கும் மாநில விருதுகளை வழங்கி மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. செல்வி இராமஜெயம் அவர்கள் விழா பேருரையாற்றவுள்ளார்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயங்கள் வழங்கி வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கி சிறப்புரையாற்றவுள்ளார்கள். விழாவிற்கு வருவோரை திரு.ப.ரா.சம்பத் அவர்கள் வரவேற்பார்கள். மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அரசுச் செயலாளர் திருமதி. கண்ணகி பாக்கியநாதன் அவர்கள் விழாவிற்கு தலைமையேற்பார்கள்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**